Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 260 | சனிக்கிழமை 13 ஒகஸ்ட் 2022 | ஆடி 28 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 12 | விலை : ரூ. 50

முச்சந்தி முரளி



"நாங்கள் உந்தப் பதவியளுக்கெல்லாம் ஆசைப்படேலை. எங்கட காணி, பூமியளில நிம்மதியா, சுதந்திரமா வாழ உரிமை தந்தாலே காணும்"

## தமிழர்களை பிரதமராக ஏற்றுக்கொள்ளும் மனநிலை தோன்றாமை கவலைக்குரியது

### அமைச்சர் பத்திரண நாடாளுமன்றில் வெளிப்படைப் பேச்சு

கொழும்பு, ஒகஸ்ட் 13

இனவாதமற்ற சமூகத்தைத் தோற்றுவிக்கவேண்டுமாயின் குறைந்தபட்சம் பிரதமர் பதவிக்கு தமிழ், முஸ்லிம் சமூகத்தினர் தெரிவு செய்யப்படுவதை ஏற்றுக்கொள்ளவேண்டும். அதற்கான மனநிலை காணப்படவேண்டும். இருப்பினும் அந்த மனநிலை இதுவரை 10

## தமிழர் ஒருவரை பிரதமராக்குங்கள்

### பெரமுன எம்.பி. கோரிக்கை

கொழும்பு, ஓக. 13

அமைச்சரவையை வரையறுத்து பிரதமர் உள்ளிட்ட முக்கியமான பதவிகளைத் தமிழர், முஸ்லிம்கள் இடையே பகிர்ந்துகொள்ள 10

# நாங்கள் சாக முன்னர் நீதியை வழங்குங்கள்

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவுகள் கண்ணீருடன் ஐ.நா.வுக்கு மனு

**கிளிநொச்சி, ஒகஸ்ட் 13**

**எமது வாழ்நாள் முடிவதற்கு முன்னர் நீதியின் தீர்ப்பைக் காண விரும்புகின்றோம். ஆகவே முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ச மற்றும் கோத்தாபய ராஜபக்ச உட்பட எம் மீதான இனவழிப்புக்குக் காரணமான அனைவரையும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தி தண்டனை பெற்றுக் கொடுக்கவேண்டும் - இவ்வாறு ஐ.நா.வுக்கு கையளிக்கப்பட்டுள்ள மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.** 11

ஊடகவியலாளர் என்ற போர்வையில்

## போராட்டத்தை திசைதிருப்ப முயன்றவர்கள் வெளியேற்றம்

கிளிநொச்சி, ஓக. 13

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் உள்நாட்டு விசாரணையே தேவை என்ற குரல் பதிவை வழங்குமாறு கோரிய இருவர் போர்ராட்டக்களத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர். 04

## நாடாளுமன்றில் நேற்று கூட்டமைப்பு போராட்டம்

### மூடிமறைக்க நேரலை ஒளிபரப்பில் முயற்சி

கொழும்பு, ஓக. 13

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவுகளின் போராட்டம் 2 ஆயிரம் நாளை நேற்று எட்டியுள்ள நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன் 04

## அரசியல் தீர்வை முன்வையுங்கள் சர்வகட்சியை நாம் ஆதரிக்கிறோம்

### நாடாளுமன்றத்தில் கூட்டமைப்பு சவால்

கொழும்பு, ஓக. 13

சர்வகட்சி அரசாங்கம் என்ற வலையில் கண்ணை மூடிக் கொண்டு சிக்குவதற்கு நாம் தயாரில்லை. அரசியல் தீர்வு முன்வைக்கப்பட்டால் மாத்திரமே சர்வகட்சி அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கலாம் - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி 12

அரைகுறையாகவுள்ள

## யாழ்.மாநகரசபைக் கட்டடத்தை இந்தியா பூர்த்தியாக்கவேண்டும்

### துணைத்தூதுவரிடம் மாநகர முதல்வர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 13

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கான நகர மண்டபம் பெரும் செலவில் மீளமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட 10

நகைக்கடை உரிமையாளரை

## கடைக்கு அழைத்துச் சென்று நகை மற்றும் பணம் கொள்ளை

கிளிநொச்சி, ஓக. 13

நகைக்கடை உரிமையாளரைத் துன்புறுத்தி அவரைக் கடைக்கு அழைத்துச் சென்று பணம் மற்றும் 12

சீனா தயாரித்த

## பாக். போர்க் கப்பல் கொழும்புக்கு வந்தது

கொழும்பு, ஓக. 13

சீனத் தயாரிப்பான பாகிஸ்தான் போர்க் கப்பல் 'தைமூர்' கொழும்புத் துறைமுகத்தை நேற்றுக் காலை திட்டமிட்டபடி வந்தடைந்தது. 09

## பெரும்போகத்துக்கான டீசல்விநியோகம் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 13

யாழ். மாவட்டத்தில் 2022/2023 பெரும் போக நெற்பயிர்ச் செய்கை ஆரம்பிப்புக்கான உழவுப் 10

ஒகஸ்ட் 16 ஆம் திகதி

## சீனக் கப்பல் வருவதற்கு இலங்கை அரசு அனுமதி

கொழும்பு, ஓக. 13

சீனாவின் உளவுக் கப்பல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை அம்பாந்தோட்டை துறைமுகத்தை 04

'வெளியே வரக்கூடாது!'

## ஹொட்டல் அறைக்குள்ளே முடக்கப்பட்ட கோத்தாபய

பாங்கொக், ஓக. 13

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கின் மையப்பகுதியில் உள்ள 11

## கோத்தாபயவின் பதவி விலகலை சாதகமாக்கி நீதியை நிலைநாட்டுக

### ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு 5 தமிழ்க் கட்சிகள் கூட்டாகக் கடிதம்

யாழ்ப்பாணம், ஓக. 13

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இலங்கையிலிருந்து தப்பிச் சென்று வெளிநாடுகளில் தங்கியுள்ளமையால் உலகளாவிய நியாயாதிக்கம் என்ற கோட்பாட்டின்கீழ், நடவடிக்கை எடுப்பது இப்போது மிகவும் பொருத்தமானது. அவரது பதவி 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடத்தல் பாணியில் நாட்டில் கைதுகள்!



## அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என சட்டத்தரணிகள் சங்கம் தெரிவிப்பு

**கொழும்பு, ஓக. 13**

**சட்ட நடைமுறையைப் பின்பற்றாமல் கடத்தல் பாணியில் முன்னெடுக்கப்பட்டு வரும் கைது நடவடிக்கைகள் தொடர்பில், இலங்கை சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர்களிடமிருந்து கிடைத்த முறைப்பாடுகளில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் மற்றும் செயலாளர் இசுறு பலபட்டபெண்டி ஆகியோர் இணைந்து பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பிவைத்த கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடிதத்தில் மேலும் உள்ளதாவது,

சட்ட நடைமுறையைப் பின்பற்றாமல் கடத்தல் பாணியில் முன்னெடுக்கப்பட்டு வரும் கைது நடவடிக்கைகள் தொடர்பில் கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பில் நாம் அவதானம் செலுத்தியுள்ளோம். பல்வேறு சந்தர்ப்பங்களிலும் சந்தேகநபர்களின் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகளுக்கு உரியவாறு தகவல்கள் வழங்கப்படவில்லை என்றும் மறியலிலுள்ள சந்தேகநபர்கள் தொடர்பிலும் அவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படும் போதும் இது குறித்து தவறான தகவல்கள் வழங்கப்பட்டன என்றும் எமக்கு அறியத்தரப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் 2018ஆம் ஆண்டு 5ஆம் இலக்க வலிந்து காணாமலாக்கப்படலில் இருந்து அனைத்து நபர்களும் பாதுகாக்கப்படுவதற்கான சட்டம் தொடர்பான சர்வதேச சமவாயத்தின் 15ஆம் மற்றும் 16 ஆம் பிரிவின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள சில சரத்துக்களை உங்களது அவதானத்துக்குக் கொண்டு வருகின்றோம்.

எனவே கைது நடவடிக்கைகளில் ஈடுபடும் பொலிஸ் அதிகாரிகள் அந்தச் சந்தர்ப்பத்தில் தாம் யாரென்பது பற்றிய அடையாளத்தை வெளிப்படுத்துவது இன்றியமையாததது என்பதுடன் கைது செய்யப்பட்ட நபர் அவரது உறவினருடனோ அல்லது சட்டத்தரணியுடனோ தான் எங்கே இருக்கின்றேன் என்பது குறித்து உரையாடுவதற்கு உடனடியாக வாய்ப்பை வழங்குவதும் அவசிய மாகும் -என்றுள்ளது. (ம-14)

## மேதினி 9 வன்முறை:

## தென்மாகாண சபையினது முன்னாள் உறுப்பினர் கைது!

கொழும்பு, ஓக. 13

தென் மாகாணசபை முன்னாள் உறுப்பினர் நிஹால் வெதராச்சி நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மே 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தின் போது வீடுகளைத் தாக்கி சேதப்படுத்திய குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## அருட்தந்தை ஜீவந்த பிணையில் விடுதலை

கொழும்பு, ஓக. 13

அருட்தந்தை ஜீவந்த பீரிஸை பிணையில் விடுவிக்க கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

சட்டத்தரணிகள் ஊடாக நீதிமன்றத்தில் அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் நேற்று முன்னிலையானார். அவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்துக்கு கோரிக்கை விடுத்தனர்.

எனினும் இந்தக் கோரிக்கையை நிராகரித்த கொழும்பு கோட்டை நீதிவான் திலின கமகே, அருட்தந்தை ஜீவந்த பீரிஸை தலா 5 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்குமாறு உத்தரவிட்டார். அருட்தந்தைக்கு எதிரான வழக்கை எதிர்வரும் 26ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுக்க உத்தரவிடப்பட்டது. (ம-14-இ)

## மின் கட்டண அதிகரிப்பை மக்களால் தாங்கமுடியாது

### எதிர்கட்சித் தலைவர் கவலை

அசாதாரண மின் கட்டண உயர்வால், ஒட்டுமொத்த மக்களும் கடும் சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர். இதனை நாட்டு மக்களால் தாங்கி கொள்ள முடியாது என்று தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சாதாரண மக்கள் முதல் தொழில் முனைவோர் வரை அனைத்துத் தரப்பினரையும் இந்த மின்கட்டண அதிகரிப்பு கடுமையாகப் பாதித்துள்ளது. தற்போது அசாதாரண அழுத்தத்தின் மத்தியிலுள்ள மக்களுக்கு இது மற்றொரு சுமையாகும் -என்றார். (ம)

## 'கோத்தா கோ கம' களம் நேற்று முற்றாக அகற்றம்!

கொழும்பு, ஓக. 13

காலிமுகத்திடல் 'கோத்தா கோ கம' போராட்டக்களம் நேற்று முற்றாக அகற்றப்பட்டது.

காலிமுகத்திடல் 'கோத்தா கோ கம' போராட்டக்களத்திலிருந்து வெளியேறுவதாக போராட்டக்காரர்கள் கடந்த 10ஆம் திகதி உத்தியோக பூர்வமாக அறிவித்திருந்தனர்.

இந்த நிலையில், போராட்டக்களத்தில் எஞ்சியிருந்த கூடாரங்கள் பொலிஸ், சிறப்பு அதிரடிப்படையினர் மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையினரால் நேற்று முற்றாக அகற்றப்பட்டன. (ம-14-இ)

## விலைச்சுட்டெண் அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 13

கொழும்பு பங்குச் சந்தையின் நேற்றைய மொத்த புரள்வு 6.33 பில்லியன்களாக பதிவாகியது என்று கொழும்பு பங்குச் சந்தை குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை, அனைத்துப் பங்குகளின் மொத்த விலைச் சுட்டெண் நேற்று 9,027.48 புள்ளிகளாக பதிவாகியுள்ளது. மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு பின்னர் கொழும்பு பங்கு சந்தையின் அனைத்து பங்குகளின் மொத்த விலைச் சுட்டெண் இன்று 9,000 புள்ளிகளைக் கடந்துள்ள முதல் சந்தர்ப்பம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## ஜனாதிபதி மாளிகை முற்றுகை

## தானிஷ் அலி உள்ளிட்ட நால்வருக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, ஓக. 13

தானிஷ் அலி உள்ளிட்ட நான்கு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஜனாதிபதி மாளிகைக்குள் அத்துமீறி நுழைந்து சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பான வழக்கு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே அவர்களுக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. (ம)

## மின்கட்டணச் சுமை

## குறைவருமானம் பெறுவோருக்கு சலுகைகளை வழங்கத் திட்டம்!

கொழும்பு, ஓக. 13

மின்கட்டண அதிகரிப்பால் பாதிக்கப்பட்டுள்ள குறைவருமானம் பெறும் குடும்பங்களுக்கு கூடுதல் சலுகைகளை வழங்குவதற்குப் பரிசீலிக்கப்பட்டுள்ளது என்று சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

திருத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் நிவாரணம் பெறவேண்டிய மக்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்து தற்போது விவாதிக்கப்பட்டு வருகின்றது.

குறிப்பாக குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு மின்சாரக் கட்டணம் தொடர்பாக சில சலுகைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

முன்னதாக, எரிசக்தி அமைச்சரும், 'மின்சார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மக்களுக்கு திறைசேரி ஊடாக நிவாரணம் வழங்கப்படும்' என்று தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## சர்வகட்சி அரசாங்கத்துக்கான அறிகுறிகள் சிறந்தவையல்ல!

### லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 13

சர்வகட்சி அரசாங்கம் குறித்த ஆரம்ப அறிகுறிகள் சிறந்தவையாகத் தென்படவில்லை. பதவிகளைப் பகிர்ந்தளிப்பதைத் தவிர, தீர்க்கமான எந்தவொரு வேலைத்திட்டமும் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் சமகால அரசியல் குறித்த கலந்துரையாடல் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் சர்வகட்சி அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவோம் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளோம். நாடாளுமன்ற மேற்பார்வைக் குழுக்களை நியமிப்பதாக ஜனாதிபதி உறுதியளித்துள்ளார். அதற்கமைய அந்தக் குழுக்களில் பங்கேற்பதன் ஊடாக சர்வகட்சி வேலைத்திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவோம். யார் ஒத்துழைப்புக்களை வழங்கினாலும் வேலைத்திட்டங்களே முக்கியத்துவம் உடையவையாகும். எனினும் அரசாங்கத்தினால் எந்தவொரு வேலைத்திட்டமும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. அதனைவிடுத்து அமைச்சுப் பதவிகளையும், ஆளுநர்களுக்கான அதிகாரங்களையும் பகிர்ந்தளித்துக் கொண்டிருக்கின்றனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது கொள்கை விளக்க உரையில், கோத்தாபய அரசாங்கத்தில் கைவிடப்பட்ட முக்கிய மான விடயங்களை மீள நடைமுறைப்படுத்துவதாகக் கூறியுள்ளார். அதற்கமையவே நாடாளுமன்ற மேற்பார்வைக் குழுக்களை மீள நியமிப்பதாகவும், சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதாகவும், உர நிவாரணத்தை வழங்குவதாகவும் தெரிவித்துள்ளார். அவற்றை விரைவில் நடைமுறைப்படுத்தவேண்டும் என்று வலியுறுத்துகின்றோம் -என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடந்தோம் - நடக்கின்றோம்- நடப்போம்












வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்தக் கோரியும், நீதியை வலியுறுத்தியும் கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் நேற்று 2 ஆயிரம் நாள்களை நிறைவு செய்தது. இதைமுன்னிட்டு நேற்றையதினம் நடைபெற்ற பேரணியில்.....





## கோத்தாபய எங்கு சென்றாலும் நீதிக்கான போராட்டம் தொடரும்

### நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் அறிவிப்பு

**கொழும்பு, ஓக. 13**

**இனப்படுகொலையாளியும், சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதியுமாகிய கோத்தாபய ராஜபக்ச எந்த நாட்டுக்குச் சென்றாலும், உலகளாவிய நியாயாதிக்கத்தின் கீழ் அவரைக் கைதுசெய்யக் கோரும் நீதிக்கான போராட்டம் தொடரும் என்று நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் அறிவித்துள்ளது.**

கோத்தாபயவின் ஆட்சிக்கு எதிராக ஜூலை 7ஆம் திகதி வெடித்த கலவரத்தை அடுத்து, அவர் நாட்டை விட்டு வெளியேறி மாலைதீவுக்குச் சென்று அங்கிருந்து சிங்கப்பூருக்குச் சென்று தங்கினார். இந்த நிலையில் தற்போது சிங்கப்பூரிலிருந்து தாய்லாந்துக்குச் சென்றுள்ளார்.

இந்த நிலையிலேயே நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் இவ்வாறு தெரிவித்துள்ளது. கோத்தாபயவைக் கைதுசெய்யுமாறு சிங்கப்பூர் சட்டமா அதிபரை நோக்கி முன்னெடுக்கப்பட்டிருந்த கையெழுத்துப் போராட்டம், தாய்லாந்து சட்டமா அதிபரை நோக்கியதாக மாற்றம் செய்யப்படுவதோடு, முன்னராக பெறப்பட்ட கையொப்பங்கள் நீதிக்கான நோக்கத்தின் அடிப்படையில் தாய்லாந்து சட்டமா அதிபரிடம் முன்வைக்கப்படும் கோரிக்கைகளுடன் இணைக்கப்பட்டுள்ளன என்று நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-14)

**வவுனியாவிலும் போராட்டம்**






காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடியும் அவர்களுக்கு நீதி வேண்டும் என்று வலியுறுத்தியும் வவுனியாவில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டமும் நேற்றையதினம் 2 ஆயிரமாவது நாளை நிறைவு செய்தது. இதைமுன்னிட்டு வவுனியாவிலும் நேற்றையதினம் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ம-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீச்சர திருப்பணிச்சபைக்கு 'யாழ் விருது' நேற்றுக் கையளிப்பு!



**யாழ்ப்பாணம், ஓக. 13**

**2022ஆம் ஆண்டுக்கான 'யாழ் விருது'ம் பொற்கிழியும் வரலாற்றுச்சிறப்பு மிக்க மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச் சபையினரிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது. அத்துடன், நல்லைக்குமரன் மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது.**



யாழ். மாநகரசபை மற்றும் சைவ சமய விவகாரக்குழுவின் ஏற்பாட்டில் நல்லையம்பதி அலங்காரக்கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு வெளியீட்டப்படும் 30 ஆவது நல்லைக்குமரன் மலர் வெளியீடும், 'யாழ் விருது' வழங்கல் நிகழ்வும் நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ். மாநகர சபையின் ஆணையாளர் கவிஞர் க.ஜெயசீலன் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

'யாழ் விருது' இம்முறை திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச் சபையினருக்கு வழங்கப்பட்டது. திருக்கேதீச்சரத்தில் மேற்கொள்ளப்பட்ட அறப்பணிகளையும், சமயப் பணிகளையும் பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது. அத்துடன் திருக்கேதீச்சர ஆலயத்துக்கு இந்தியா வழங்கிய நிதியுதவிகளுக் காக, யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் கௌரவிக்கப்பட்டார்.

நிகழ்வுக்கு பிரதம அதிதியாக யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன், சிறப்பு விருந்தினராக இந்து கலாசார அலுவல்கள் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டு விருதுகளை வழங்கிவைத்தனர்.

நல்லைக்குமரன் நூலின் முதற்பிரதியை விருந்தினர்களிடம் இருந்து தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் பெற்றுக்கொண்டார்.

நிகழ்வில் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ தேசிய ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், வாசுதேவகுருக்கள் உள்ளிட்ட சமயத்தலைவர்கள் மாநகரசபையின் உறுப்பினர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், கல்வியாளர்கள், சமயப் பெரியார்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-20)

# நல்லூர் உற்சவத்தையொட்டி தெய்வீக திருக்கூட்டத் தொடர்

யாழ்ப்பாணம், ஓக. 13

நல்லூர் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் இணை அனுசரணையில் தெய்வீகத் திருக்கூட்டத் தொடர் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதன்படி தெய்வீகத் திருக்கூட்டச் சிறப்புத் தொடர் நிகழ்வின் பன்னிரண்டாம் நாள் நிகழ்வு இன்று 13 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள், ஆன்மிகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள், வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி ராஜமல்லிகை சிவசுந்தர சர்மா ஆகியோர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதன்போது பன்னாலை கணேசா அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் அரங்கேறவுள்ளன.

அத்துடன் 'வழிபாட்டு நடைமுறைகளை விதிகளாகச் சொல்லிய நாவலர் பெருமான்' என்னும் தலைப்பில் சைவப்புலவர் சி.கா.கமலநாதனின் சிறப்புச் சொற்பொழிவும், திருமதி சங்கீதா ரவிசங்கர் மற்றும் திருமதி ஆரணி பாலச்சந்திரன் ஆகியோரின் சங்கீதக் கச்சேரி நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (ச-இ)

# இந்திய மீனவர்கள் 9 பேருக்கு மறியல்

முல்லைத்தீவு, ஓக. 13

திருகோணமலை - முல்லைத்தீவு இடையிலான கடற்பரப்பில் கைதான 9 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

குறித்த கடற்பரப்புக்குள் கடந்த புதன்கிழமை அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் 9 இந்திய மீனவர்களைக் கடற்படையினர் கைதுசெய்திருந்தனர். கைதுசெய்யப்பட்ட மீனவர்க ளைக் கடற்படையினர் திருகோணமலை கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்திடம் ஒப்படைத்தனர்.

கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் அவர்களை நேற்றுமுன்தினம் திருகோணமலை நீதிமன்றில் முற்படுத்தியது. அதன்போது எதிர்வரும் 25 ஆம் திகதிவரை 9 இந்திய மீனவர்களையும் விளக்கமறி யலில் வைக்குமாறு பதில் நீதிவான் அப்துல் சலாம் சகீர் உத்தரவிட்டார். (ச-இ)

# இடியுடன் கூடிய மழை தொடரும்

கொழும்பு, ஓக. 13

மொனராகலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் சில இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களத்தால் நேற்று வெளியிடப்பட்ட வானிலை அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் சிறிதளவில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோமீற்றர் வரை காணப்படும்.

அத்துடன் புத்தளத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளும் அம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் வரையான கடற்பரப்புகளும் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும் - என்றுள்ளது. (ம-14.இ)

# தஞ்சாவூர் பல்கலைக்கழக பட்டமளிப்பு நாளை யாழில்

யாழ்ப்பாணம், ஓக. 13

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி டச்சு வீதியில் அமைந்துள்ள பூமாரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் தமிழ் இணையக் கல்விக் கழகத்தோடு இணைந்து இதனை நடத்தவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறைத்தலைவர் பேரா சிரியர் சி.ரகுராம் மற்றும் சிறப்பு விருந்தினராக வட மாகாண சிரேஷ்ட சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர் மொகமட் அன்வர் மொகமட் அனாஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-159)

*சீனக் கப்பல்...*

வந்தடைவதற்கான அனுமதி, இலங்கை அரசாங்கத்தால் நேற்று வழங்கப்பட்டுள்ளது.

சீனக் கப்பலின் வருகை தொடர்பில், இந்தியா பாதுகாப்பு ஆட்சேபனைகளை எழுப்பியிருந்தது. இதற்கு அமைவாக கப்பலின் வருகையை தாமதப்படுத்துமாறு இலங்கை அரசாங்கம் சீனாவிடம் கோரியிருந்தது.

இந்த நிலையில், சீனக் கப்பலின் இலங்கைக்கான வருகையை நிறுத்துவதற்கு போதுமான காரணங்களை இந்தியா மற்றும் அமெரிக்கா முன்வைக்கவில்லை என்பதன் அடிப்படையில், கப்பல் வருவதற்கான அனுமதி இலங்கை அரசாங்கத்தால் நேற்று வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கப்பல் நேற்றுமுன்தினம் இலங்கையை வந்தடையும் வகையில் பயணத்தைத் திட்டமிட்டிருந்தது. தற்போது அது 5 நாள்கள் தாமதப்படுத்தப்பட்டு எதிர்வரும் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இலங்கையை வந்தடையவுள்ளது. (அ-ஒ-5)

*போராட்டத்தை...*

தம்மை ஊடகவியலாளர்கள் என்று அடையாளப்படுத்திய இருவர், காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவினர்களிடம் சென்று, உள்நாட்டு விசாரணையே தேவை என்ற சாரப்பட குரல் பதிவு வழங்குமாறு கோரியுள்ளனர்.

தமது போராட்டத்தின் இலக்கையே குறித்த நபர்கள் திசை திருப்ப முயன்றமை தொடர்பில் கோபமடைந்த காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவுகள், அவர்களைப் போராட்டக்களத்திலிருந்து வெளியேற்றினர்.

ஊடகவியலாளர்கள் என்று குறித்த நபர்கள் தம்மை அறிமுகப்படுத்தியபோதும், இதுவரை அவர்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஊடகக் களப்பணியில் ஈடுபட்டமையை தாங்கள் அறியவில்லை என்று உள்ளூர் ஊடகவியலாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ-ஒ-113)

*நாடாளுமன்றில்...*

றத்தில் எழுந்துநின்று பதாகைகளை ஏந்தியவாறு கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

சபையில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவுகளது போராட்டம் 2ஆயிரம் நாளை எட்டியுள்ளதை சபையின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். குறித்த சந்தர்ப்பத்தில் சபையில் பிரசன்னமாகியிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பதாகைகளை ஏந்தியவாறு கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். இதன்போது, நேரலை ஒளிபரப்பு சபாநாயகரை நோக்கி மாற்றப்பட்ட நிலையில், அது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் சபையின் கவனத்துக்கும் கொண்டுவந்திருந்தார். (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பாசாங்கால் பயனில்லை!

'22ஆவது திருத்தம் இலங்கையில் தற்போது நிலவும் எந்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வாக அமையாது. அந்தத் திருத்தம் ஜனாதிபதியின் சர்வாதிகாரப் போக்கை குறைந்தபட்சம் சவாலுக்கேனும் உட்படுத்தவில்லை. இந்தத் திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கு அப்பால்சென்று ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்' என்று எச்சரித்துள்ளனர் சர்வதேச ஜூரிகள்.

22ஆவது திருத்தம் தொடர்பில் அரசாங்கம் மிகையான ஊதிப்பெருப்பித்தல்களை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருவது யாவரும் அறிந்ததே. பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஒருபுறம், நீதி அமைச்சர் விஜயதாஸ மறுபுறம் என்று 22ஆவது திருத்தத்தை பிரச்சினைகளுக்கு அருமருந்தாக்கும் முயற்சியில் கடும் பிரயத்தனம் காட்டிவருகின்றனர். இந்தப் பின்னணியில்தான், உலகளவில் ஓய்வு பெற்ற நீதிபதிகளையும் சட்டத்துறையில் உச்சம்தொட்ட வல்லுநர்களையும் கொண்டு செயற்பட்டுவரும் சர்வதேச ஜூரிகள் ஆயம், 22ஆவது திருத்தமொன்றும் அவ்வளவு பெரிய வரப்பிரசாதம் அல்ல என்றும், ஜனாதிபதியின் சர்வாதிகாரப் போக்குக்கூட அதில் சவாலுக்கு உட்படுத்தப்படவில்லை என்றும் அதிரடியான கருத்தின் மூலம் அரசின் நெற்றிப்பொட்டில் ஓங்கி அறைந்திருக்கின்றது.

இலங்கை இன்று பொருளாதாரச் சிதிலத்தை எதிர்கொண்டமைக்கும், திவாலாகும் விளிம்புநிலைக்குச் சென்றமைக்கும் ஜனாதிபதியிடம் குவிந்திருந்த சர்வாதிகாரங்கள்தான் முதன்மைக் காரணம் என்பதில் இரண்டாவது கருத்தில்லை. இந்த மிகை அதிகாரங்களைக் கொண்டு எடுக்கப்பட்ட 'திருத்தி எழுதப்பட முடியாததும், சவாலுக்கு உட்படுத்த முடியாததுமான' அதிகாரங்கள்தான் நாட்டை அதலபாதாளத்துக்குள் தள்ளியிருக்கையில், ஜனாதிபதியிடம் குவிந்திருக்கும் எக்கச்சக்கமான அதிகாரங்களைக் கிஞ்சித்தும் குறைக்காமல் கொண்டுவரப்படும் 22 ஆவது திருத்தத்தால் என்ன பயன்?

''ஜனாதிபதியின் சர்வாதிகாரப் போக்குக் கைவிடப்படும், நிறைவேற்று அதிகாரங்கள் குறைக்கப்படும்'' என்ற வாக்குறுதிகளை ரணில் அரசாங்கம் வழங்கியுள்ளதை மறுப்பதற்கில்லை. ஆனால், அந்த வாக்குறுதிகள் இலங்கையர்களுக்குப் புதியனவா? என்ற வினா இங்கு மலைபோல் எழுகின்றது. காரணம், சந்திரிகா குமாரதுங்கவின் காலத்தில் இருந்து இந்த 'நிறைவேற்று அதிகார ஒழிப்பு' பேசுபொருளாகத்தான் இருந்து கொண்டிருக்கின்றது. சந்திரிகா, மஹிந்த, மைத்திரி, கோத்தாபய என்று ஆட்சிக்கு வந்த அத்தனைபேருமே நிறைவேற்று அதிகார ஒழிப்பை வலியுறுத்தியிருந்தார்கள்தான். ஆனால், இவர்களில் எவர் இதற்குச் செயல்வடிவம் கொடுத்தார்கள்? (மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தின் அதிகாரத்தைப் பலப்படுத்தினார். ஆனால், அது நிறைவேற்று அதிகார ஒழிப்பாக இருக்கவில்லை) இப்படியிருக்கையில் ரணில் நிறைவேற்று அதிகாரத்தைக் கைவிடுவார் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

காலிமுகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்களாக இருக்கட்டும், பொதுமக்களாக இருக்கட்டும், எதிர்க்கட்சிகளாக இருக்கட்டும் ''நிறைவேற்று அதிகாரம் ஒழிக்கப்படவேண்டும். நாடாளுமன்றத்தின் அதிகாரங்களைப் பலப்படுத்தவேண்டும்'' என்றுதான் ஒரே குரலில் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றார்கள். ஆக, மக்களின் எந்தக் கோரிக்கை முதன்மையானதாக உள்ளதோ அது இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. கடந்தகால அரசாங்கங்களைப்போல இம்முறையும் அந்த முதன்மைக்கோரிக்கை கிடப்பில்தான் போடப்பட்டுள்ளது. துணைக்கோரிக்கைகளில் ஒன்று அல்லது இரண்டை 22 ஆவது திருத்தத்தை வைத்து நிறைவேற்றுவதன் மூலம், ஏதோ பிரச்சினைக்குத் தீர்வைத் தேடியதுபோன்ற தோற்றப்பாட்டை அரசாங்கம் வலிந்து ஏற்படுத்தவே எத்தனிக்கின்றது.

இந்தத் தெளிவு சர்வதேசத்துக்கும் மிகையாகவே இருக்கின்றது. அரசின் கபடத்தனம் சர்வதேசத்துக்கு ஒன்றும் மர்ம நகர்வு அல்ல. ஜூரிகளின் கருத்தும் இதைத்தான் கட்டியம் செய்கின்றது. பிரச்சினைகளைத் தீர்த்தால்தான் மீட்சி. பாசாங்குகளால் பயனில்லை.

### நாளொரு நல்வார்த்தை

"சோம்பல் உன்னை ஏமாற்றாமல் காத்துக்கொள். ஏனெனில் அதற்கு இன்று ஒருநாளைக் கொடுத்தால், அது அடுத்த நாளையும் திருடிக் கொள்ளும்" - குரோகுவில்




# சர்வதேச திருப்திக்கே சர்வகட்சி அரசாங்கம்

## இம்ரான் மஹரூப் எம்.பி சுட்டிக்காட்டு



**கொழும்பு, ஓக. 13**

**சர்வகட்சி அரசாங்கத்தை உருவாக்கி அதனூடாக சர்வதேச நாடுகளைத் திருப்திப்படுத்தும் மாயையை ஏற்படுத்தவே பேச்சுக்கள் நடைபெறுகின்றன என்று திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூப் சுட்டிக்காட்டியுள்ளார்.**

நாடாளுமன்றில் அண்மையில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இந்த அரசாங்கத்தின் மீது சர்வதேசம் நம்பிக்கையிழந்து காணப்படுவதால் மத்திய கிழக்கு நாடுகள் உதவ முடியாது என்று கூறியிருக்கின்றன. ஏனைய வெளிநாட்டு உதவிகள் தடை செய்யப்பட்டுள்ளன. ஆகையால் சர்வகட்சி அரசாங்கம் என்ற விடயத்தை உருவாக்கி சர்வதேச நாடுகளுக்கு ஒரு மாயையை ஏற்படுத்தவேண்டும் என்பதற்காக இவ்வாறான பேச்சுக்கள் நடைபெறுகின்றன. இந்த சர்வகட்சி அரசாங்கத்திலே எங்களுடைய எதிர்க்கட்சியும் இணையத் தயாராக இருக்கிறது. ஆனால் அமைச்சுப்பதவிகள் பெற்றுக் கொள்ளாமல் நல்ல விடயங்களுக்கு ஆதரவளிப்பதற்கும், இந்த அரசாங்கத்தை வழிநடத்தி உதவுவதற்கும் எங்களுடைய கட்சியின் தலைவரும் நாங்களும் தயாராகவுள்ளோம் - என்றார். (ம-14.இ)

# ரணிலின் ஆட்டம் 'குளோஸ்'!

## பிரபல சோதிடர் கணிப்பு

கொழும்பு, ஓக. 13

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரைவில் தனது பதவியை இழக்க நேரிடும் அபாயம் உள்ளது என பிரபல ஜோதிடர் கே.சரத்சந்திர தெரிவித்துள்ளார்.

நேர்காணல் ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றுக் கொண்ட நேரம் மிகவும் மோசமாக உள்ளது. ஒக்ரோபர் 13 ஆம் திகதிக்குப் பின்னர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பெரும் பிரச்சினைகள் தலைதூக்கவுள்ளன. அதனால் அவர் அவற்றுக்கு முகம்கொடுக்கமுடியாது பதவியை இழக்க நேரிடும். அடுத்த வருடம் ஜனவரி மாதத்தின் பின் பொதுத் தேர்தலுக்கு நாடு செல்லும் - என்றார்.

ஜூலை 12 ஆம் திகதிக்குப் பின்னர் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தனது ஜனாதிபதி பதவியை விட்டுவிலக நேரிடும் எனவும் எதிர்பாராத ஒருவர் ஜனாதிபதியாகுவார் எனவும் ஜோதிடர் கே.சரத்சந்திர முன்னர் கணித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச-இ)


**நாளை**

14.09.2022
ஞாயிற்றுக்கிழமை
ஆடி 29

சுபநேரம் : 09.05 - 10.35
ராகுகாலம்: 04.35 - 06.05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## வீரகத்தி கணபதிப்பிள்ளை

**தாயின் மடியில்**
**08.09.1935**

**இறைவன் அடியில்**
**18.07.2019**

கணப் பொழுதும் எண்ணவில்லை எம் கலங்கரை
- விளக்கே!
நீங்கள் இமைப்பொழுதில் எம்மை விட்டு அகல்வீரென
அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும் வழிநடத்திய
எங்கள் அன்புத் தெய்வமே அப்பா!
நீங்கள் இல்லாத உலகம் என்றும் இருள் மயமானது
எங்கே காண்போம் உங்கள் மலர்ந்த முகத்தை
உங்கள் பிரிவைத் தாங்குமா எங்கள் இதயம்...
ஒவ்வொரு நொடியிலும் இதயத் துடிப்பைப் போல
உணர்கின்றோம்...
நீங்கள் கடந்து சென்றாலும் எங்கள் அருகில் - நீங்கள்
இருப்பதை நாங்கள் உணர்கின்றோம்.

**இல. 42, பொன்னர் ஒழுங்கை,**
**மீசாலை மேற்கு,**
**மீசாலை.**

**குடும்பத்தினர்**
**காண்டீபராஜா -**
**077 360 4014**
**ஐங்கரன், சேகரன்.**

# மரண அறிவித்தல்

## நமசிவாயம் ஜெகதீஸ்வரன் (ஈசன்)



யாழ். சங்கானை அரசடி வீதியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Paris ஐ வசிப்பிடமாகவும், தற்போது பிரித்தானியா லண்டனை வதிவிடமாகவும் கொண்ட நமசிவாயம் ஜெகதீஸ்வரன் அவர்கள் கடந்த (04-08-2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம், பூமணி (கனடா) தம்பதிகளின் அன்பு மகனும், யாழ். பருத்தித்துறையைச் சேர்ந்த காலஞ்சென்ற சோமசுந்தரம், தங்கேஸ்வரி தம்பதி களின் அன்பு மருமகனும், நிர்மலா அவர்களின் அன்புக் கணவரும், அனுஷன் அவர் களின் பாசமிகு தந்தையும், அன்னலஷ்சுமி (செல்வி - கனடா), காலஞ்சென்ற மகேஷ்வரன், ஜெயராணி (கனடா), திருமால் (லண்டன்), கெங்காதரன் (சிவா - லண்டன்), ஜெயதர்சினி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், உதயநேசன் (கனடா), யோகாமாலினி (பிரான்ஸ்), சுரேஸ் (கனடா), தயாளினி (லண்டன்), குமுதினி (லண்டன்), பாலேஸ்வரன் (லண்டன்), சிவராஜ் - விஜயா (நியூசிலாந்து), மோகன்- திலகா (இலங்கை), அருள் - ரேவதி (இலங்கை), விமலா - சூரி (சுவிஸ்), ராஜன் (இலங்கை), காண்டிபன் (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஆரபி, ஆரிஸ், அஞ்சலன், ஆதிரா, ஆதித்தியா ஆகியோரின் அன்பு மாம னாரும், ராகுல், அஸ்வின் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், அபிநாஸ், அக்ஷயா, ஆத்விக் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், அலெக்சனா, நிரோஷ், ரிதுசன், நிந்துஷா ஆகியோரின் அன்பு மாமாவும், அர்ச்சனா, அபிநயா ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

**பார்வைக்கு**
Saturday, 13 Aug 2022 4:00 PM - 8;00 PM 445 Kenton Rd, Harrow HA3 0XY, UK
**இறுதிக்கிரியைகள்**
Tuesday, 16 Aug 2022 11:30 AM - 3:00 PM 366A Stag Ln, London NW9 9AA, United Kingdom
**தகனம்**
4:00 PM - 5:00 PM Holders Hill Rd, London NW7 1NB, UK,

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**

தொடர்புகளுக்க:

| | | |
|---|---|---|
| நிர்மலா | - மனைவி | Mobile : 0044 7405 428 872 |
| உதயநேசன் | - மைத்துனர் | Mobile : 001 416 648 13 94 |
| கெங்கன் (சிவா) | - சகோதரன் | Mobile : 0044 7852 183 561 |
| திருமால் (திரு) | - சகோதரன் | Mobile : 0044 7917 800 774 |
| பாலேன் | - மைத்துனர் | Mobile : 0044 7919 371 907 |
| காண்டீபன் | - மைத்துனர் | Mobile : 0094 7708 72182 |

**தோற்றம்**
**03.08.1964**

**மறைவு**
**04.08.2022**


(C) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## கோபாலபிள்ளை கதிர்காமநாதன் (K.K.நாதன்)

(ஓய்வுநிலை தபால் உத்தியோகத்தர் - பிரதம தபாலகம் யாழ்ப்பாணம்



தோற்றம்
07.04.1952

மறைவு
12.08.2022

நயினாதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி 15/2, மாரியம்மன் வீதியினை வசிப்பிட மாகவும் கொண்ட கோபாலபிள்ளை கதிர்காமநாதன் அவர்கள் நேற்று (12.08.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோபாலபிள்ளை - அன்னலெட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ் சென்ற இரத்தினசபாபதி மற்றும் ஞானப்பூங்கோதை தம்பதிகளின் அன்பு மருமகனும், பஞ்சாட்சர தேவியின் ஆருயிர் கணவரும், யோகேஸ்வரியின் அருமைச் சகோதரரும், மகாதேவா (ஓய்வுநிலை தொழில் நுட்ப உத்தியோகத்தர்), சோதிதாசன் (பிரான்ஸ்), கெங்காதரன் (பிரான்ஸ்), கிருஸ்ணராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கல்யாணி (பிரான்ஸ்), சுதர்சனா (பிரான்ஸ்), மனோகரராணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகலனும், காலஞ் சென்றவர்களான பரமலிங்கம்-சிவக்கொழுந்து, இராசரெத்தினம்-புவனேஸ்வரி, குழந்தைவேலு -பவானியம்மா, சபாரத்தினம் மற்றும் புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர் களான இராமநாதன்-சிவக்கொழுந்து, தங்கராசா- அன்னபூரணம், நடராசா மற்றும் சிவபாக்கியம் ஆகியோரின் பெறாமகனும், புனிதவதி (ஜேர்மனி), இராஜசூரியர் (ஜேர்மனி), செந்தில்நாதன் ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரரும், புனிதமலர் கணேசதாசன் (ஆசிரியர்), மகாயோகன் டிலானி (கமநல உத்தியோ கத்தர்), சிவநேசன் தர்சினி (கனடா), அபிராமி, ஹர்ஷனா, கீர்த்தனா, கஜமுகன், விஷ்னகன், கார்த்திகன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கஜசாந், உமேசன், குகானந், விஷ்ணுகா, சங்கவி, சங்கீதா, சாரங்கி, நிரோஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.08.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

15/2, மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல்:
குடும்பத்தினர்.

Sri Lanka German Training Institute
(SLGTI) – Kilinochchi SLGTI
(State Ministry of Education)

**விலைமனுக்கோரல் அறிவிப்பு - நீடிப்பு**

## போசனசாலை சேவை

போசனசாலை சேவை தொடர்பாக 10.04.2022 தேதியிடப்பட்ட நாளிதழ் விளம்பரத்தில் வெளியிடப்பட்ட விலைமனுக்கோரல் இறுதித்திகதி பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது.

- விலைமனுக்கோரல் வினியோகிக்கும் இறுதி நாள் 30.08.2022 (09AM-03PM)
- விலைமனுக்கோரல் முடிவுறும் நாள் 31.08.2022 (03PM)
- விலைமனுக்கோரல் திறக்கும் நாள் 31.08.2022 (03PM)

**பணிப்பாளர்/அதிபர்,**
**இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனம்**
**அறிவியல் நகர், கிளிநொச்சி.**

# சாதனையாளருக்கு இன்று பாராட்டு

கொடிகாமம், ஒக.13
தென்மராட்சி இலக்கிய அணியின் ஏற்பாட்டில், ச.புசாந்தனின் தேசிய பளுதூக்கல் சாதனையைப் பாராட்டும் நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சாவகச்சேரி தென்மராட்சி கலைமன்றத்தில் நடைபெறவுள்ளது. (ய-159)

## வர்த்தகர்களுக்கான அறிவித்தல்

எமது சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கான (ப.நோ.கூ.சங்கங்கள். சந்தைகள் உட்பட) நிறுவை. அளவை நிறுக்கும் கருவிகளுக்கான முத்திரையிடல் ஆனது யாழ். மாவட்ட செயலகத்தின் அளவீட்டு அலகுகள். நியமங்கள். மற்றும் சேவைகள் பிரிவினால் கீழ் குறிப்பிடப்பட்ட தினங்களில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை மேற்கொள்ளப்படவுள்ளது. எனவே குறித்த தினங்களில் எமது பிரதேசத்திற்குட்பட்ட சகல வர்த்தகர்களும் குறித்த இடங்களுக்கு தவறாது சமுகமளித்து நிறுவை. அளவை. நிறுக்கும் கருவிகளை காண்பித்து பரிசோதித்து முத்திரையிட்டு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

| | |
|---|---|
| 15.08.2022 – 16.08.2022 - | மல்லாகம் உப அலுவலகம் - வலி வடக்கு பிரதேச சபை |
| 18.08.2022 – 19.08.2022 | தெல்லிப்பளை உப அலுவலகம் - வலி வடக்கு பிரதேச சபை |

**சோமசுந்தரம் சுகிர்தன்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை.**

## உடைமையில் கஞ்சா: இளைஞர் கைதானார்

யாழ்ப்பாணம், ஒக. 13
யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொக்குவில் பகுதியில் கேரளக் கஞ்சாவை வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞரொருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் குறித்த இளைஞரை சோதனைக் குட்படுத்தியபோது அவரிடமிருந்து 990 மில்லிகிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

சந்தேகநபருக்கு எதிராக யாழ். நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். (ச-125)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



வையகத்துள் 14.08.1933
வானகத்துள் 29.07.2018

அமரர்
**செல்லத்துரை இராசரத்தினம்** (J.P)
(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர். யாழ்.மாநகரசபை. )
*திதி: ஆடிமாத தேய்பிறை துதியை (13.08.2022)*

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய்
எமக்கு வழிகாட்டி வாழ்ந்து எம்மை விட்டுப்
பிரிந்து சென்று விட்டாலும்
அப்பா! உங்கள் நினைவுகள் எங்கள்
இதயங்களில் இருந்து ஒருபோதும் மறைவதில்லை
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல சந்திரசேகரனை வேண்டுகின்றோம்.

75/1, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(cs.45903) (2.6)
குடும்பத்தினர்

## ஐந்தாம் ஆண்டு நினைவில்



**விஜயரட்ணம் சுதாகரன்**
*திதி: ஆடித் தேய்பிறை துதியை (13.08.2022)*

மகனே ! என் சுதனே !
நானிருந்தும் நீ மறைந்து
ஐந்தாண்டு சென்றதுவோ!
ஐந்தென்ன ஐம்பதென்ன....
நானிருந்து வாழும்வரை இந்த
நானிலமே போற்றும்படி உன்
ஆத்மாவை ஆராதிப்பேன்!!!
அன்புத்தாய் வசந்தா

தோற்றம் 12.08.1967
மறைவு 09.08.2017

பழைய வீதி,
கோப்பாய்.
தாய், மனைவி,
பிள்ளைகள்.

## 'ஈ-பில்' முறையில் தண்ணீர் கட்டணம்

கொழும்பு, ஒக. 13
தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை தமது வாடிக்கையாளர்களின் நீர்க் கட்டணப் பட்டியலை மின்னிதழ் (ஈ-பில்) முறைமைக்கு மாற்றம் செய்யவுள்ளது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு, கடதாசித் தட்டுப்பாடு மற்றும் மாதாந்தம் பல மில்லியன் ரூபாவை சேமிப்பது, எதிர்காலத்தில் கட்டாய நடைமுறையாக வரவுள்ள தொழில்நுட்ப முறைமைக்குள் மக்களை பழக்கப்படுத்தல் போன்ற பல்வேறு காரணிகளைக் கவனத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (ச-113)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 19.03.1978
உதிர்வு 05.08.2020

**திருமதி கவிதா சுதாகரன்**
(BA, Dip.in.Edu.)
( ஆசிரியை - யா/புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரி )
**திதி : 13.08.2022**

ஆண்டுகள் இரண்டு ஆனாலும் அன்னையே உங்கள்
அன்பின் அரவணைப்பு என்றும் எம் மனதை விட்டகலாது
எமது ஈரவிழிநீரால் உங்கள் பாதமலர் இறைஞ்சுகின்றோம்
உங்கள் நிழல் என்றும் எம்மனதிலே நிலைத்திருக்கும்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
குடும்பத்தினர்
077 941 0182, 077 946 7936

குறுக்கு வீதி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.
(cs.20267) (2.6)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அரும்பாக 20 - 07 - 1974
சருகாக 15 - 07 - 2022



அமரர் **கலைமதி செல்லத்துரை**
**கணக்காளர்**
BBA (Hons), Dip in Pub ADM, MA in Pub ADM LLB (Hons)

அஞ்சாமை அறிவுடமை
தன்னம்பிக்கை தலைநிமிர்வோடு
தலைவணங்காத் தலைவியாய்
தூக்கமற்று உழைத்து
ஆளாகி நின்றவேளை
விதியோ காலனவன் சதியோ

மீளா வழி சென்று - எம்மை
ஆறாத் துயரில் ஆழ்த்தி
நீங்கா நினைவாகிப் போன
எங்கள் குடும்ப விளக்கே!
இப்பிறப்பில் நீ அமைதி கொள்!
மீண்டும் எழுந்துவா எம்மிடத்தே!!

அமரர் கலைமதி செல்லத்துரை அவர்களின் மறைவு கேட்டு ஓடிவந்து உதவி புரிந்த அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகள்.

நாளை (14.08.2022) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் வீட்டுக்கிருத்திய, ஆத்மசாந்தி நிகழ்வுகளும், மதியபோசன நிகழ்வும் நடைபெற உள்ளதால் அத்தருணம் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

72/50, ஐயனார் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(cs.20260) (2.6)
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
19 . 09 . 1963



மறைவு
09 . 08 . 2022

## திரு.செல்லையா ரஞ்சன்

(பணியாளர் விசேட தரம் 1 வலயக்கல்வி அலுவலகம் யாழ்ப்பாணம்)

வேலணை சரவணை கிழக்கு பள்ளம்புலத்தைப் பிறப்பிடமாகவும் செட்டித்தெரு நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.செல்லையா ரஞ்சன் அவர்கள் 09.08.2022 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா மனோன்மணியின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற முருகவேள் மற்றும் இந்திராணி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் முருகவேள் யோகேஸ்வரியின் அன்பு மைத்துனரும் கேமரூபா, செந்தூரன் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்) மயூரன் (வைத்தியர் - தேசிய வைத்தியசாலை கொழும்பு) ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.08.2022 செவ்வாய்க்கிழமை அன்று பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

58/11 செட்டித்தெரு,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்.

### பாக். போர்க்...

இந்தப் போர்க் கப்பல் அதிநவீன ஆயுதங்கள், சென்சார் கருவிகள் மற்றும் லேசர் உதவியுடன் இயங்கக் கூடிய ஏவுகணைகளைக் கொண்டதாகும்.

இது மலேசியா மற்றும் கம்போடியா நாடுகளில் போர்ப்பயிற்சியில் ஈடுபட்டிருந்தது. இந்த நிலையில், சொந்த நாட்டுக்குத் திரும்பும் அந்தக் கப்பலை நிறுத்திவைக்க பங்களாதேஷிடம் பாகிஸ்தான் சார்பில் அனுமதி கேட்கப்பட்டிருந்தது. ஆனால் பங்களாதேஷ் அந்தக் கப்பலுக்கு அனுமதி மறுத்த நிலையில், அந்தக் கப்பலை கொழும்பு துறைமுகத்தில் நிறுத்த இலங்கை அரசாங்கம் அனுமதியளித்தது. நாளை மறுதினம் திங்கட்கிழமை பாகிஸ்தான் நோக்கிக் கப்பல் புறப்படும். சீனாவின் உளவுக் கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வருவதற்கு இந்தியா எதிர்ப்பு வெளியிட்டுள்ள சர்ச்சை அடங்குவதற்குள், பாகிஸ்தானின் போர்க்கப்பலின் கொழும்பு வருகை சர்வதேசக் கவனத்தைப் பெற்றுள்ளது.

(அ-ஒ-இ)

# 17 ஆம் ஆண்டு நினைவலைகள்

## திருமதி அருந்தவஈஸ்வரி இரகுநாதன்

அன்னை மடியில்
07.04.1919

அரன் அடியில்
22.07.2005

திதி: ஆடி மாத
அபரபக்க துதியை 13.08.2022



பதிவிரதை அன்னையின் மறைவு
பதினேழு ஆண்டு ஆனதுவோ!
பதைத்துப் பரிதவிக்கிறேன் அன்னையே!
பாங்குடனே வளர்த்து கல்வியூட்டி
என்னை ஆளாக்கிய தெய்வமே!
என் துன்ப துயரங்களைத் துடைத்து
ஆசீர்வதிப்பீர்களாக

உடையார் வீடு,
சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

அன்பு மகள்
செல்வி செந்திற்செல்வம் இரகுநாதன்
(இளப்பாறிய அதிபர்)
உற்றார், உறவினர், நண்பர்கள்.

(cs.202031(2.6)

# மரண அறிவித்தல்

## தெட்சணாமூர்த்தி தையல்முத்து



பண்ணாகத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தெட்சணாமூர்த்தி தையல்முத்து நேற்று (12.08.2022) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தெட்சணாமூர்த்தியின் (இ.மி.சபை) மனைவியும், காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை, மகேஸ்வரி தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி சின்னம்மா தம்பதியரின் மருமகளும், கமலதாசன், கவிதா, விஜிதா (யாழ்ற்றன் கல்லூரி ஆசிரியர்), யசோதா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஐங்கரன் (இ.போ.ச. காரைநகர்), சாந்தரூபன் (லண்டன் தொழிலதிபர்) ஆகியோரின் மாமியாரும், அபிசயன் (லண்டன்), பவிசயன் (லண்டன்), இசைப் பிரியா (இலங்கை) ஆகியோரின் பேர்த்தியும், தனலட்சுமி (சுவிஸ்), மகேந்திரா தேவி, சர்வாஜினி தேவி (ஜேர்மன்), தனபாலன், கமலாதேவி, அமரர் புண்ணியமூர்த்தி ஆகியோரின் மூத்த சகோதரியும், அமரர் சிவமயம் மற்றும் அன்னஞானம், திருமகள் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.08.2022) சனிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்ணாகம், சுழிபுரம்,
077 164 2243, 077 271 8299

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 20138)

# மரண அறிவித்தல்

தோற்றம்
09 . 10 . 1954



மறைவு
11 . 08 . 2022

## நாதன் சூரியகுமாரி

யாழ்ப்பாணம் நீராவியடியை பிறப்பிடமாகவும் மணிக்கூட்டு கோபுர ஒழுங்கையை வசிப்பிடமாகவும், பிரான்சை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட நாதன் சூரியகுமாரி அவர்கள் (11.08.2022) வியாழக்கிழமை அன்று பிரான்சில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஸ்ணகுட்டி அக்கினேஸ் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலு சரஸ்வதி தம்பதியரின் பாசமிகு மருமகளும், வேலு நாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சர்மிளாவின் பாசமிகு தாயாரும், உதயகுமாரன் (ஓய்வுபெற்ற பதிவாளர் மேல் நீதிமன்றம் - வவுனியா), சந்திரகுமாரன், ஜெயகுமார், விஜயகுமாரி, காலஞ்சென்ற தவக்குமார் மற்றும் பிறேம்குமார் (ஜேர்மனி), சுகுமார், கிருஸ்ணகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பத்மினி அந்தோனிப்பிள்ளை மகேந்திரன் மற்றும் கௌசல்யா (பிரான்ஸ்), பார்வதி, வளர்மதி, புஸ்பராணி, ரவீந்திரன், தவரஞ்சினி, பவானி (ஜேர்மனி), இந்துமதி, விவேகானந்தன் ஆகியோரின் மைத்துனியும், ராஜா (மலேசியா), ராணி, ரஜீவ், ரஞ்சித், தருஷா, பிரியதர்ஷன், டயான் காயத்திரி (துபாய்), காலஞ்சென்ற ஜெயதீஸ்வரன் மற்றும் ஜெயத்திரி, ரம்மியா, ரமனியா, சாகித்தியா அஸ்மிதா பிரவீனா, துஷாந்தன், துஷிக்கா, ரிஷா (ஜேர்மனி), சுயாமதி, சுரேனுஜன் கீர்த்தனா, மதுனுஜன், நெருஜன், ஜெகநாதன், நளினி, ரகுராஜ் நித்தியா, சுதாகரன் சுலக்சனா, ரவிசங்கர் (பிரான்ஸ்), சுபாசினி ஆகியோரின் அன்பு மாமியாரும், ரஞ்சித் ரஜித்திரி (லண்டன்), ரஜிந்திரன் கிருபாஞ்சலி (லண்டன்), வேணிலன், கௌதமன் மதுரா, லக்ஸ்மன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

தகவல்: குடும்பத்தினர்.
நாதன் - 3376983396
சந்திரகுமார் - 0776618111

# மரண அறிவித்தல்

தோற்றம்
02 - 10 - 1945



மறைவு
12 - 08 - 2022

## திருமதி சுந்தரலிங்கம் மகாலட்சுமி

தட்டாம்புலம் வலந்தலை காரைநகரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுந்தரலிங்கம் மகாலட்சுமி நேற்று (12.08.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வடிவேலு மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற பூபாலபிள்ளை செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் யசோதா (நில அளவையாளர் பிரதேச நில அளவை காரியாலயம் கிளிநொச்சி), சிவதர்சன் (லண்டன்), சிவசுதன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் அரிகரன், அனுஜா (லண்டன்), சந்திரகலா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் நடராசா (லண்டன்), சறோசா ஆகியோரின் சகோதரியும் ஹர்ணி, சிவனஜா (லண்டன்), கேஷவனி, உபஷ்னா, விஹாசினி (லண்டன்), அக்சதன், அக்ஷானா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற யோகநாதன், சாந்தகுமாரி (லண்டன்) மற்றும் நேசரத்தினம், சோழமலர், உருக்குமணிதேவி, சிவபுண்ணியம், பேரின்பநாயகம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் Dr.தர்சிகா (லண்டன்), மித்தன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் சிறீதரனின் பெரியம்மாவும் கனகசபை காலஞ்சென்ற செல்வராணி மற்றும் கமலாம்பிகை ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.08.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவதர்சன் - 076 879 6813
சிவசுதன் - 074 306 2451
அரிகரன் - 077 953 5479

தகவல் :
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தமிழர்களை...

தோற்றம் பெறவில்லை - இவ்வாறு பெருந்தோட்டத்துறை அபிவிருத்தி அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஜனாதிபதியின் சிம்மாசன உரை மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறிய அமைச்சர், மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் போராட்டத்தைத் தொடர்ந்து அப்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவி விலகினார். கடந்த இரண்டரை வருட காலப்பகுதியில் அவர் நாட்டுக்காகச் சிறந்த விடயங்களைச் செயற்படுத்தியிருந்தாலும், கொரோனாத் தொற்று மற்றும் தூரநோக்கற்ற பொருளாதாரக் கொள்கை ஆகிய காரணிகளால் பதவி விலக நேரிட்டது. பல்லின சமூகம் வாழும் நாடு என்ற ரீதியில் இனவாத முரண்பாடுகளுக்கு மத்தியில் பல சிறந்த திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

பொதுஜன பெரமுன தலைமையிலான அரசு முன்னெடுத்த ஒரு சில தீர்மா னங்கள் பொருளாதார நெருக்கடியைத் தீவிரப்படுத்தியுள்ளன. பொருளாதார மீட்சிக்காக அரச சேவை மறுசீரமைக்கப்படவேண்டும் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டுக்கொள்ளவேண்டும்.

எதிர்வரும் நாள்களில் முன்னெடுக்கப்படும் தீர்மானங்கள் பிரபல்யமற்றதாக அமைந்தாலும், பொருளாதார மீட்சிக்கு ஏற்புடையதாக அமையும். நாட்டு மக்கள் அனைவரின் ஒத்துழைப்பு கிடைக்கப்பெற்றால் மாத்திரமே பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண முடியும்.

இனவாதமற்ற சமூகத்தைத் தோற்றுவிக்கவேண்டுமாயின் குறைந்தபட்சம் பிரதமர் பதவிக்குத் தமிழ், முஸ்லிம் சமூகத்தினர் தெரிவு செய்யப்படுவதை ஏற்றுக்கொள்ளவேண்டும். அதற்கான மனநிலை காணப்படவேண்டும். இருப்பினும் அந்த மனநிலை இதுவரை தோற்றம் பெறவில்லை - என்றார். (அ-ஒ-22)

### யாழ். மாநகரசபைக்....

போதும் தற்போதைய பொருளாதார நெருக்கடியால் அது கைவிடப்படும் சூழல் ஏற்பட்டுள்ளது. அரைகுறையாகவுள்ள அந்தக் கட்டடத்தை இந்தியா பொறுப்பேற்று முழுமைப்படுத்தி வழங்கவேண்டும் - இவ்வாறு யாழ். மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன், இந்தியத் துணைத்தூதுவர் ராகேஷ்நட்ராஜிடம் கோரிக்கை விடுத்தார்.

நல்லைக்குமரன் மலர் வெளியீடு நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு மணிவண்ணன் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாநகர சபைக்குரிய நகர மண்டபம் போரால் அழிந்தது. மாநகர சபை தற்போது நல்லூர்க் கந்தன் ஆலயத்துக்குச் சொந்தமான ஆதனத்தில் தற்காலிகமாக போதிய வசதிகளின்றி இயங்குகின்றது.

நல்லூர்க் கந்தன் ஆலய அறங்காவலரின் வடிவமைப்பில், நகரப்பகுதியில் புதிய மாநகரசபை மண்டபத்தை அமைப்பதற்கான வேலைத் திட்டங்கள் நடைபெற்றன. இலங்கை அரசாங்கத்தின் நிதியில் அது அமைக்கப்பட்டுக் கொண்டிருந்தது. தற்போதைய பொருளாதார நெருக்கடியால் அது கைவிடப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. அரைவாசிக் கட்டுமானம் முடிவடைந்திருந்தாலும் இயங்க முடியாத நிலையிலேயே அது உள்ளது.

யாழ். மாநகர சபையின் சக்திக்கு அப்பாற்பட்ட வகையில் நிதியைத் திரட்டி அதனை முழுமைப்படுத்த முயல்கின்றோம். தற்போதைய விலை மதிப்பீடு அடிப்படையில், கட்டடப் பணியைப் பூர்த்தியாக்க இன்னும் 2,000 மில்லியன் ரூபா தேவை. எனவே இந்திய அரசாங்கத்திடம் அதனைச் செய்து தருமாறு கோருகின்றோம். இந்தியாவை தந்தையர் நாடாகவே பார்க்கின்றோம். தொப்புள் கொடி உறவுகள் வாழ்கின்ற இடமாகப் பார்க்கின்றோம். வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்கள் இந்தியாவின் நலனுக்கு எதிராகச் செல்லமாட்டார்கள் எனும் உறுதியையும் உத்தரவாதத்தையும் வழங்குகின்றேன் - என்றார். (அ-ஒ-20)

### பெரும்போகத்துக்கான...

பணிகளுக்குத் தேவையான 2 லட்சத்து 64 ஆயிரம் லீற்றர் டீசல் விவசாயிகளுக்கு இன்று கமநல சேவைகள் நிலையத்தினரின் கண்காணிப்பில் விநியோகிக்கப்படவுள்ளது.

கட்டைவேலி, நல்லூர், சுன்னாகம், பண்டத்தரிப்பு, சங்கானை, கொடிகாமம், கைதடி, வேலணை ஆகிய 8 பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாக இந்த டீசல் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் 32 ஆயிரத்து 720 ஏக்கர் நிலப்பரப்பு 2022/2023 பெரும்போகத்துக்காக அடையாளப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5)

### தமிழர்...

வேண்டும். இதன்மூலம் இலங்கை தொடர்பில் சர்வதேசத்துக்குச் சிறந்த செய்தியைக் கொண்டு செல்ல முடியும் - என்று பொதுஜன பெரமுனவின் டலஸ் அணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கை விளக்க உரை மீதான மூன்றாம் நாள் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது டிலான் பெரேரா மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேசத்துக்குச் சிறந்த செய்தியொன்றைக் கூற முடியும். அமைச்சரவையை வரையறுத்து பிரதான பதவிகளை மற்றைய இனத்தவர்களிடையே பகிர்ந்து கொள்ளலாம். சிங்களவர் ஒருவர் ஜனாதிபதியாக இருந்தால் தமிழர் ஒருவரைப் பிரதமராக்கலாம். ஏன் இங்கு இவ்வாறு முடியாது? அமெரிக்காவில் கறுப்பினத்தைச் சேர்ந்த பராக் ஒபாமாவுக்கு ஜனாதிபதியாக முடியுமென்றால் இங்கே தமிழ் பேசும் ஒருவர் பிரதமரானால் என்ன? முஸ்லிம் ஒருவர் இங்கே சபாநாயகரானால் என்ன? இதன்மூலம் இனவாத மனநிலையில் இருந்து விடுபட்டுள்ளோம் என்று சர்வதேசத்துக்குக் கூற முடியுமாக இருக்கும்.

புரட்சிகரமான இனவாதமற்ற போராட்டக்காரர்கள் கேட்ட வரையறுக்கப்பட்ட அமைச்சரவையை அமையுங்கள். இதனைச் செய்து சிறந்த செய்தியை சர்வதேசத்துக்கு வெளிக்காட்டுங்கள். அதனைத் தொடர்ந்து அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் உள்ளடக்கி துறைசார் மேற்பார்வைக் குழுக்களை அமையுங்கள் - என்றார். (அ-ஒ-22)

## மரண அறிவித்தல்

பிறப்பு 15 - 09 - 1948



இறப்பு 11 - 08 - 2022

### கந்தன் நாகமணி

(இலங்கை வங்கி ஓய்வுநிலை ஊழியர்)

தொல்புரம் மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தன் நாகமணி 11.08.2022 அன்று சிவபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (13.08.2022) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பொன்னாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 636 3759
074 176 6326

## மரண அறிவித்தல்

தாய் மடியில் . 08 . 12 . 1979



இறைவன் அடியில் . 11 . 08 . 2022

### திரு.சிவலிங்கம் சக்திகரன்

(தீபன், டேவிட்)

யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தை பிறப்பிடமாகவும், நெளுக்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சிவலிங்கம் சக்திகரன் அவர்கள் கடந்த (11.08.2022) வியாழக் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் செல்லம்மாவின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற புஸ்பநாதன் மற்றும் பாலேஸ்வரியின் பாசமிகு மருமகனும், வாசுகியின் அன்புக் கணவரும், தாருஜன், கனுசிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான சிவகரன், சுதாஸ்கரன் மற்றும் சசிகரன், சிறிகரன் (பிரான்ஸ்), பிரபாகரன், சரூபகரன், செல்வகரன் (பிரான்ஸ்), சுரேனுகா (பிரான்ஸ்), சிந்துஜா ஆகியோ ரின் அன்பிற்கினிய சகோதரரும், செந்தில்ராஜன், பார்த்தீபன் ஆகியோரின் மைத்துன ரும், அண்ணிமார், மச்சாள்மார், மச்சான்மாரின் மைத்துனரும், பெறாமக்களின் சித்தப்பாவும், பெரியப்பாவும், மருமக்களின் மாமனாரும், பேரப்பிள்ளைகளின் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.08.2022) ஞாயிற்றுக்கிழமை, 119/6, சிவபுரம் மன்னார் வீதி, வவுனியாவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 11.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் நெளுக்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 20293) 1/6

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 25.05.1939 இறப்பு 11.08.2022

எமது பாடசாலையின் பழைய மாணவரும்,
முன்னாள் ஆசிரியரராகவும்,
பூசகராகவும் பணியாற்றிய

**பிரம்மஸ்ரீ**
**சுவாமிக்குருக்கள் பஞ்சாட்சர ஐயர்**

அவர்களின் மறைவால் துயருற்று இருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கொன்றலடி விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/ யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் பேருந்துகள், டிப்பருக்கு டீசல்

யாழ்ப்பாணம், ஓக. 13
தென்மராட்சி பிரதேசத்திலுள்ள தனியார் பேருந்துகள் மற்றும் டிப்பர் வாகனங்களுக்கு நுணாவில் ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இன்று சனிக்கிழமை டீசல் விநியோகிக்கப்பட உள்ளது.
கியூ ஆர் குறியீட்டு அடிப்படையில் டீசல் விநியோகம் இடம்பெறவுள்ளதாக எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் வை.சிவராசா அறிவித்துள்ளார். (ஒ-இ)

# அவசரகாலச் சட்டத்துக்கு எதிரான மனுக்கள் ஏற்பு

கொழும்பு, ஓக. 13
பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதியால் அவசரகாலச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதால் பொது மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுவதாக உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட 3 அடிப்படை உரிமை மீறல் மனுக்களை முன்கொண்டு செல்ல உயர் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.
ஆயினும், அவசரகாலச் சட்டத்தை இடைநிறுத்துவதற்கான இடைக்கால உத்தரவு எதுவும் இந்தச் சந்தர்ப்பத்தில் பிறப்பிக்கப்படமாட்டாது என்றும் உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.
அத்துடன், சம்பந்தப்பட்ட அவசரகாலச் சட்ட ஒழுங்குமுறைகளில் உள்ள விடயங்களை மீள்பரிசீலனை செய்யுமாறும், அவ்வாறு ஏதேனும் திருத்தம் செய்யப்படுமாயின் இரண்டு வாரங்களுக்குள் நீதிமன்றத்துக்கு அறிவிக்குமாறும் சட்டமா அதிபருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
மனு மீதான விசாரணை எதிர்வரும் ஒக்ரோபர் 28 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

# 5 லட்சம் அரச பணியாளர் வெளிநாடு செல்லத் தயார்

கொழும்பு, ஓக. 13
அரசாங்க ஊழியர்களுக்கு வெளிநாடு செல்வதற்கான வாய்ப்பை வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் சுமார் 5 லட்சம் பேர் வெளிநாடு செல்லத் தயாராகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
அரசாங்கத்தின் அரச ஊழியர்களின் சுமையைக் குறைக்கும் நோக்கில் இந்த வருட இறுதிக்குள் குறைந்தபட்சம் 5 ஆயிரம் அரச ஊழியர்களை வெளிநாட்டுத் தொழிலுக்காக அனுப்ப மனித வளம் மற்றும் வேலைவாய்ப்புத் துறை எதிர்பார்த்துள்ளதாகவும் கூறப்படுகிறது. (அ-ஒ-இ)

# இலங்கையே, தீர்ப்பை மாற்று!

## விஸா ரத்துச் செய்யப்பட்ட பிரேசர் நீதிமன்றில் மனு

கொழும்பு, ஓக. 13
இலங்கையிலிருந்து நாடு கடத்துவதற்கு குடிவரவு குடியகல்வு திணைக்களம் எடுத்த தீர்மானத்தை இரத்துச் செய்ய உத்தரவிடக் கோரி கெய்லி பிரேசர் என்ற பிரிட்டன் பெண் மேன்முறையீட்டு நீதிமன்றில் நீதிப்பேராணை மனுத் தாக்கல் செய்துள்ளார்.
காலிமுகத்திடலில் போராட்டத்தில் தான் கலந்துகொண்டதால், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தனக்கு வழங்கப்பட்ட விஸாவை தன்னிச்சையாக இரத்துச் செய்ததாக கெய்லி பிரேசர் சுட்டிக்காட்டியுள்ளார்.
விஸா நிபந்தனைகளை மீறியதற்காக பிரேசருக்கு வழங்கப்பட்ட விஸாவை நிறுத்துவதற்கு குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் தீர்மானித்திருந்ததுடன், நாளைமறுதினம் திங்கட்கிழமைக்குள் நாட்டை விட்டு வெளியேறுமாறும் அவருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.
இந்த நிலையிலேயே, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தால் எந்தவொரு நியாயமான அடிப்படையும் இன்றி எடுக்கப்பட்ட இந்தத் தீர்மானம் சட்டவிரோதமானதென அறிவித்து அதனை செல்லுபடியற்றதாக்கி உத்தரவொன்றை பிறப்பிக்குமாறும் கெய்லி பிரேசர் நீதிமன்றில் கோரியுள்ளார். (அ-ஒ-இ)

# சீனக் கப்பலை அனுமதியுங்கள்

## டலஸை ஆதரித்த சுயாதீன அணி அரசாங்கத்திடம் வலியுறுத்துகின்றது

கொழும்பு, ஓக. 13
சீன உளவுக் கப்பலான 'யுவான் வாங் - 5' அம்பாந்தோட்டை துறைமுகத்துக்குள் நுழைய அனுமதிக்கப்படவேண்டும் என்று சுயாதீன அரசியல் கட்சிக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.
நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார மற்றும் அத்துரலியே ரத்ன தேரர் ஆகியோர் இது தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.
இலங்கை வெளிநாடுகளுடன் உறவுகளைப் பேண வேண்டும், அதேநேரத்தில் அத்தகைய உறவுகள் இலங்கை - சீன உறவுகளுக்கு தீங்கு விளைவிக்காது என்பதை உறுதிப்படுத்தவேண்டும் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஜனாதிபதித் தெரிவின்போது சுயாதீன அணி, டலஸ் அழகப்பெருமவை ஆதரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

# மனோகரா சந்தியருகே இளைஞன் மீது வாள்வெட்டு

யாழ்ப்பாணம், ஓக. 13
யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மனோகரா சந்திக்கு அருகாமையில் இளைஞர் ஒருவர் வாள்வெட்டுக்கு இலக்கான நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்று இரவு மின்துண்டிப்பு நேரத்தில் இடம்பெற்றுள்ளது.
யாழ். நகரப் பகுதியிலுள்ள தொலைபேசி விற்பனையகத்தில் பணிபுரியும் தொல்புரம் மேற்கைச் சேர்ந்த மாயராசா லக்சாந்தன் என்ற இளைஞரே தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.
மனோகரா தியேட்டர் சந்திக்கு அருகாமையில் உள்ள ஆலயத்தில் இருவர் வழிபட்டுக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு மோட்டார் சைக்கிளில் வாள்களுடன் திடீரென வந்த இருவர், ஆலயத்தில் வழிபட்டுக் கொண்டிருந்த இளைஞர் மீது தாக்குதல் நடத்த முயன்றனர். உடனே அவர் ஐந்து சந்திப் பகுதியை நோக்கி தப்பியோட முயன்றுள்ளார். இருப்பினும் அவர்கள் கலைத்துக் கலைத்து வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தியதில் இளைஞனின் கையில் படுகாயம் ஏற்பட்டுள்ளது.
அதன் பின்னர் அங்கு வந்த பொதுமக்கள், படுகாயமடைந்த இளைஞனை பட்டா வாகனத்தில் ஏற்றி யாழ்ப்பாணம் போதனா மருத்தவமனையில் சேர்ப்பித்தனர். பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ-ஒ-125)

## ஈஸ்டர் தாக்குதல்

# பாதிக்கப்பட்டோருக்கு பாப்பரசர் நிதி உதவி

கொழும்பு, ஓக. 13
உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்காக ஒரு லட்சம் யூரோ வழங்க பரிசுத்த பாப்பரசர் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தொகையை 3 பகுதிகளாகப் பிரித்து உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்க கொழும்பு பேராயர் நடவடிக்கை எடுத்துள்ளார். (அ-ஒ-இ)

## நாங்கள்...

வலிந்து காணாமலாக்கப்பட்டோரைத் தேடும் உறவுகள் முன்னெடுத்து வரும் போராட்டம் 2 ஆயிரம் நாள்களை எட்டியுள்ளதை நினைவுகூரும் வகையில், வடக்கு மற்றும் கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரைத்தேடும் உறவுகளின் சங்கத்தால் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்துக்கு முன்பாக நேற்று மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அங்கிருந்து கிளிநொச்சி டிப்போ சந்தி வரையில் உறவுகள் பேரணியாகச் சென்றனர்.
பேரணி முடிவில், ஐக்கிய நாடுகள் சபைக்கு மனு ஒன்றும் அனுப்பிவைக்கப்பட்டது.
அந்த மனுவில் முக்கியமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
ஆரம்பத்தில் இலங்கை அரசாங்கத்திடம் நீதியை எதிர்பார்த்தபோதும் அதை நிறைவேற்றாது எம்மை ஏமாற்றியது. இதன் காரணமாகவும் சிறிலங்காவின் நீதித்துறையின் 'சிங்களவர்க்கு ஒரு சட்டம், தமிழருக்கு ஒரு சட்டம்' என்ற இனத்துவேச அணுகுமுறை காரணமாகவும் சிறிலங்கா அரசிடம் நீதி கிடைக்காது என்ற முடிவுக்கு வந்து சர்வதேசத்திடம் மட்டுமே நீதி கேட்டு போராடி வருகிறோம்.
எம்முடன் இப்போராட்டத்தில் இணைந்திருந்த 138க்கு மேற்பட்ட பெற்றோர் தமது பிள்ளைகளின் நிலை அறியாமலும், நீதி கிடைக்காமலும் இறந்து விட்டனர். நாமும் எமது வயோதிப காலத்தில் நோய்வாய்ப்பட்டு உடல் இயலாத நிலையிலும் சர்வதேசத்தில் நம்பிக்கை வைத்து போராட்டத்தைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றோம்.
இறுதிக்கட்டப்போரில் கொடூரங்களைப் புரிந்த சிங்கள அரசுக்கு ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானம் 30/1 இன் படி பொறுப்புக் கூறலுக்கான கால அவகாசத்தை நீடித்ததன் மூலம் காலம் இழுத்தடிக்கப்பட்டது. இறுதியில் சிறிலங்கா அரசாங்கமானது தன்னிச்சையாகவே அனுசரணையிலிருந்து விலகிக்கொண்டது.
சிறிலங்கா அரசு பொறுப்புக்கூறும் என்று வீணாக எதிர்பார்த்து காலத்தை மேலும் கடத்தாது தமிழருக்கு இழைத்த அனைத்துக் குற்றங்களுக்காகவும் சம்பந்தப்பட்ட அனைவரையும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தி, நீதி நிலைநாட்டப்படவேண்டும். அதுவே ஐ.நா. உட்பட்ட சர்வதேசம் இறந்த பெற்றோருக்கும், வாழ்நாள்களை எண்ணிக் கொண்டிருக்கும் வயோதிபப் பெற்றோராகிய எமக்கும் செய்யக் கூடிய நீதியாகும் - என்றுள்ளது. (அ-ஒ-213)

## ஹொட்டல்...

ஹொட்டலில் தங்கியுள்ளார். பாதுகாப்புக் காரணங்களுக்காக ஹொட்டல் அறைக்குள்ளேயே இருக்குமாறு அவரைப் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளதாகச் செய்தி வெளியாகியுள்ளது.
சிங்கப்பூரில் தஞ்சமடைந்திருந்த கோத்தாபய நேற்றுமுன்தினம் வியாழன் தாய்லாந்து சென்றார். டான் முவாங் சர்வதேச விமான நிலையத்தை ஒட்டிய இராணுவ விமான நிலையத்தின் 6ஆவது பிரிவில் அவர் பயணித்த வாடகை விமானம் தரையிறங்கியது. இந்த விமானத்தில் கோத்தாபயவும் மேலும் மூன்று பேரும் பயணித்தனர். இந்த விமானம் ஃபூகெட்டில் தரையிறங்க முதலில் திட்டமிட்டிருந்தது. ஆனால்தகவல்கசிவுகுறித்த கவலைகளையடுத்து பாங்கொக்கில் உள்ள இராணுவ விமான நிலையத்துக்கு விமானம் திருப்பி விடப்பட்டது என்று பாங்கொக் போஸ்ட் செய்தித்தாள் தெரிவித்துள்ளது. அங்கு வந்த தாய்லாந்து பொலிஸார் மற்றும் இராணுவச் சிப்பாய்கள் கோத்தாபயவை பாதுகாப்பாக ஹொட்டலுக்கு அழைத்துச் சென்றனர். ஹொட்டலின் இருப்பிடம்வெளியிடப்படாத நிலையில், அங்குபாதுகாப்பைஉறுதிசெய்வதற்காக சிறப்புப் பிரிவுப் பணியகத்தைச் சேர்ந்த பொலிஸார் சிவில் உடையில் நிறுத்தப்பட்டுள்ளனர் என்றும் தகவல் வெளியாகியுள்ளது. (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோத்தாபயவின்...

விலகல் நீதிக்கான புதிய சாத்தியங்களை ஏற்படுத்தியுள்ளது - இவ்வாறு ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு 5 தமிழ்த் தேசியக் கட்சிகள் கூட்டாக இணைந்து எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளன.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன், ரெலோ தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், புளொட் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமசந்திரன், தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர் ந.சிறீகாந்தா ஆகியோர் இணைந்து இந்தக் கடிதத்தை கடந்த 9ஆம் திகதி அனுப்பி வைத்துள்ளனர்.

அந்தக் கடிதத்தில் மேலும் முக்கியமாக வலியுறுத்தப்பட்டுள்ளதாவது;

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் 2021ஆம் ஆண்டு மார்ச் மாத அறிக்கையின் பரிந்துரையின்படி, இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பரிந்துரைப்பதன் முக்கியத்துவத்தை, வட கொரியாவைப்போல ஐ.நா. பாதுகாப்புச் சபை இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பரிந்துரைக்க மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

தமிழர் தாயகத்தில் அதிகரித்த இராணுவப் பிரசன்னத்தை நீக்குதல், சிங்கள பௌத்த பிரதேசங்களை தமிழ் மாவட்டங்களில் இணைப்பதற்கு பிரதேச எல்லைகளை மீள் நிர்ணயம் செய்தல், தமிழ்ப் பிரதேசங்களை சிங்கள -பௌத்த பிரதேசங்களுடன் இணைப்பதைத் தடுத்தல், தமிழ்ப் பிரதேசங்களில் அரசாங்க அனுசரணையுடன் நடைபெறும் சிங்கள - பௌத்த குடியேற்றங்கள் என்பனவற்றை நிறுத்துதல், நிரந்தர அரசியல் தீர்வைக் கொண்டு வருவதற்கு, சர்வதேசக் கண்காணிப்புடனான பொது வாக்கெடுப்பை நடத்தல் போன்ற கோரிக்கைகளை வலுவாகப் பரிசீலிக்க வேண்டும்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் முன்னர் பரிந்துரைக்கப்பட்டபடி, கடுமையான சர்வதேச குற்றங்களுக்கு எதிராக வழக்குத் தொடர அனுமதிக்கும் உலகளாவிய நியாயாதிக்கம் என்ற கோட்பாட்டின் கீழ், இலங்கை அரச மற்றும் இராணுவ அதிகாரிகளை அவர்கள் எதுபிரதேசத்தில் கைது செய்து, குறித்த நாடுகளின் பிரதேசத்தில் இந்தக்குற்றங்கள் இழைக்கப்படவில்லை என்றாலும், விசாரணைக்கு உட்படுத்துமாறு உலகெங்கிலும் உள்ள அரசாங்கங்களைக் கேட்டுக் கொள்கிறோம். முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இலங்கையிலிருந்து தப்பிச் சென்று வெளிநாடுகளில் தங்கியுள்ளமையால் இந்த நடவடிக்கை இப்போது மிகவும் பொருத்தமானது. அவரது பதவி விலகல் நீதிக்கான புதிய சாத்தியங்களை ஏற்படுத்தியுள்ளது. மேலும், அவர் இப்போது ஜனாதிபதியாக இல்லாததால், அவர் அரச தலைவருக்கான பாதுகாப்பை இழக்கிறார்.

சுயாதீன அரசியல் கருத்துக்களை வெளிப்படுத்துவதைக் கட்டுப்படுத்தும் மற்றும் குற்றமாக்கும் அரசியல் சட்டத்தின் ஆறாவது திருத்தம் கட்டுப்படுத்தல் சட்டங்களில் முக்கியமானது. முன்னாள் ஜனாதிபதி நாட்டை விட்டுத் தப்பிச் சென்றமையால், இலங்கை மீதான குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்குமாறு இலங்கையை நிர்ப்பந்திக்கும் நடவடிக்கைகளில் சிரமங்கள் இருக்க முடியாது - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ஒ-5)

## அரசியல் தீர்வை...

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வினோநோகராதலிங்கம் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மஹிந்த ஆட்சியில் '13 பிளஸ்' எனக் கூறப்பட்டாலும் எதுவும் நடக்கவில்லை. நல்லாட்சியின்போதும், அரசியல் தீர்வு குறித்து பல சுற்றுப் பேச்சுகளை நடத்தியிருந்தோம். ஆனால், அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமராகச் செயற்பட்ட ரணில் விக்கிரமசிங்கவும் எம்மைக் கூட்டாக ஏமாற்றினர். எனவே, கண்ணை மூடிக்கொண்டு சர்வ கட்சி அரசாங்கத்தை ஆதரிப்பதற்கு நாம் தயாரில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னர் அங்கம் வகித்தனர். அந்த எண்ணிக்கை தற்போது 10 ஆகக் குறைந்துள்ளது. தமிழ் மக்களிடமிருந்து எம்மை அந்நியப்படுத்தும் சகுனி ஆட்டம் இனியும் எடுபடாது. அவ்வாறான முயற்சி முன்னெடுக்கப்பட்டாலும் ஏமாற நாம் தயாரில்லை. தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும். அப்போதுதான் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும் - என்றார். (அ-ஒ-22)

## கடைக்கு...

நகை என்பன கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் கிளிநொச்சி நகரப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

உரிமையாளர் தனது கடையைப் பூட்டிவிட்டுவட்டக்கச்சிநோக்கிச்சென்றுகொண்டிருந்தார். அப்போது வீதியில் வந்த கொள்ளைக்கும்பல் அவரை வழிமறித்தது. நகைக்கடையிலுள்ள பணப்பெட்டியின் இலக்கத்தைக் கூறுமாறு அவர் மீது அந்தக் கும்பல் தாக்குதல் நடத்தியது. உரிமையாளர் பணப்பெட்டியின் இலக்கத்தைத் தவறாகக் கூறியுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த கொள்ளைக்கும்பல் கத்திமுனையில் அவரைத் தாக்கி, முகத்தை மறைத்து கடைக்கு அழைத்துச் சென்றது. நகைக்கடையில் வைத்தும் உரிமையாளர் தாக்கப்பட்டார். தாக்குதலில் காயமடைந்த உரிமையாளர் வலி தாங்க முடியாமல் ஒரு கட்டத்தில், பணப்பெட்டியிலிருந்த ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபா பணத்தையும், 15 பவுண் நகையையும் எடுத்துக் கொள்ளைக்கும்பலிடம் கொடுத்துள்ளார். பணத்தையும் நகையையும் பெற்ற கும்பல் அங்கிருந்து தப்பிச் சென்றது.

அயலவர்களின் உதவியுடன் நகைக் கடை உரிமையாளர் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ஒ-14-113)

**கார் விற்பனைக்கு**
Nissan March (K12)
2008 Model, Silver Color
KN - xxxx, 3.9 Million
077 169 3841

**காணி விற்பனைக்கு**
தாவடி மானிப்பாய் வீதி தாவடி வடக்கில் 1 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு :077 255 0807

**மணமகள் தேவை**
1981ல் பிறந்த உடுவிலைச் சேர்ந்த சுய தொழில் (வெல்டிங்) புரியும் பூரம், 1ம் பாதம் 14, பாவக்கிரகத்தை உடைய அழகிய மணமகனுக்கு இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அழகிய மணமகள் தேவை.
074 020 6165, 077 029 4176

**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**
லயன் பொமனேறியன்
3 மாதம், தடுப்பூசி போடப்பட்ட நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
077 117 8618

**பெண் வேலையாள்கள் தேவை**
கிளிநொச்சியில் இயங்கும்
Lovely Flower Centre
கடைக்கு பெண் வேலையாள்கள் தேவை.
தொடர்பு: 077 400 5023


**காணி விற்பனைக்கு**
யாழ் நாவற்குழியில் 42 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு
- A.09 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500 m தூரத்தில் மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- A.09 வீதியில் இருந்து 200 m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று லட்சம் (300000/-)
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.

பார்வை இடும் நேரம் :காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
தொடர்புகளுக்கு
076 490 5403, 076 491 2493,076 490 6029

**காணி வாடகைக்கு உண்டு**
B.A தம்பி ஒழுங்கையில், K.K.S வீதியிலிருந்து சுமார் 400 m தூரத்தில் சுற்றிவர மதிலுடன் கூடிய அறுக்கையுள்ள 1¼ பரப்புக்காணி வாடகைக்கு உண்டு. காராஜ், ஒட்டுத்தொழிலகங்கள் முதலியன அமைத்துக்கொள்ளலாம்.
ச.மகிந்தன் 077 820 9424

**காணி விற்பனைக்கு**
மாம்பழம் சந்திக்கு அருகாமையில் A9 பிரதான வீதியில் இருந்து 190 Meter தூரத்தில் 1 பரப்பு 6 குளி காணி மற்றும் 2 பரப்பு காணித்துண்டுகள் விற்பனைக்கு உண்டு.
நல்ல அயலவர்கள் மற்றும் குடியிருப்பிற்கு சிறந்த காணி
076 065 0166, 074 308 3364

## மரண அறிவித்தல்



### சுவாம்பிள்ளை வினிபிறட் மரியதாஸ்

**(ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆசிரியர், யா/சென்.சாள்ஸ் மகா வித்தியாலயம்)**

நெடுந்தீவை பிறப்பிடமாகவும் பாண்டியன்தாழ்வு, வளன்புரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுவாம்பிள்ளை வினிபிறட் மரியதாஸ் அவர்கள் நேற்று (12.08.2022) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுவாம்பிள்ளை (ஆசிரியர்) றோசம்மா (ஆசிரியர்) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசதுரை அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மரியமலர் (இந்திரா) அவர்களின் அன்புக் கணவரும், சரோஜா (அவுஸ்திரேலியா), விமலதாஸ் (கொழும்பு), மன்றிசா (கொழும்பு), மல்லிகா (திருகோணமலை), லூர்தாஸ் (திருகோணமலை), அமலதாஸ் (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரரும், யூட் அருள்ராஜ் (நெதர்லாந்து), அமலராஜினி, யோசப்பின் றொஷானி, கிறிஸ்ரினா சுதர்சினி (ஆசிரியை, யா/புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வசந்தகுமார் (கொழும்பு), ஜெஸ்லி (அபிவிருத்தி உத்தியோகத்தர், விளையாட்டுத் திணைக்களம், வடமாகாணம்), நிரஞ்சன் (விரிவுரையாளர், தொழில்நுட்பவியல் கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஷெறின் மியூறியல், ஹேர்ஷல் ஷெறோன், டெல்வின், மரிய ஜசிந்தா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.08.2022) சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு யாழ். கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**16/12, சென்.ஜோசப் லேன்,**
**சுவாமியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**021 221 9132**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 20292) 1/6



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.